


குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி

(Constitutional Rights Education for Children - CRE)




## ஆசிரியர்களுக்கான பாடநூல் வழிகாட்டி

# இந்திய குடிமக்களாகிய “நாம்”

## (WE THE PEOPLE OF INDIA)




**வான்முகில்**

திருநெல்வேலி









**தலைப்பு**

ஆசிரியர்களுக்கான பாடநூல் வழிகாட்டி -
**இந்திய குடிமக்களாகிய நாம்**

**உருவாக்கமும் ஒருங்கிணைப்பும்**

முனைவர்.இ.தேவசகாயம்

ம. பிரிட்டோ

முனைவர் லெ.பெர்னாட்

கா.கணேசன்

**வடிவமைப்பு**

கா. கணேசன்

**பதிப்பு**

சனவரி, 2022

---

வெளியீடு :

**வான்முகில்**


15, கவிதா நகர், மகாராசநகர் அஞ்சல்,

திருநெல்வேலி - 627011.

தொடர்புக்கு : 94426 18117, 99943 68503









| வ.எண் | உள்ளடக்கம் | பக்கம் |
| --- | --- | --- |
| **அத்தியாயம் 1 - இயல்புகள்** | | |
| 1. | மனித ஏக்கங்கள் | 1 |
| 2. | சமூக வாழ்வு | - |
| 3. | பன்மைச் சமூகம் | - |
| 4. | மனித மாண்பு | - |
| **அத்தியாயம் 2 - முரண்கள்** | | |
| 5. | முன்தீர்மானம் | - |
| 6. | புண்படுத்தும் சொற்களும் துன்புறுத்தும் செயல்களும் | - |
| 7. | பிளவுபடும் சமூகம் | - |
| **அத்தியாயம் 3 - அரண்கள்** | | |
| 8. | இந்திய குடிமக்களாகிய “நாம்” | - |
| 9. | குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம் – ஓர் அறிமுகம் | - |
| 10. | தமிழக அளவிலான தொடக்க விழாவில் மாண்புமிகு சா.பீட்டர் அல்போன்ஸ் அவர்களின் சிறப்புரை | - |
| 11. | தமிழக அளவிலான தொடக்க விழாவில் முனைவர். வே. வசந்தி தேவி அவர்களின் சிறப்புரை | - |













அத்தியாயம் 1 : இயல்புகள்

# 1. மனித ஏக்கங்கள்








# 1. மனித ஏக்கங்கள்

**அன்பிற்குரிய ஆசிரியர்களே!**

அரசமைப்பு உரிமைக்கல்வி பாடநூலில் உள்ள "மனித ஏக்கங்கள்" என்ற இம்முதல் பாடத்தின் மூலம் மனித உணர்வுகளில் மிக முக்கியமான உணர்வான "ஏக்கங்கள்" பற்றி குழந்தைகள் முழுமையாக அறிந்து, புரிந்துகொள்ள ஏதுவாக கீழ்க்கண்டவாறு நன்கு திட்டமிடுங்கள்.





- இப்பாடத்தை நடத்துவதற்கு முன்பு நீங்கள் இதனை முழுமையாக வாசித்து உள்வாங்கிக் கொள்வது அவசியம்.
- குழந்தைகள் அனைவரும் பங்கேற்கும் வகையில் பொருத்தமான கற்றல் முறைகளைத் தேர்வு செய்யவும்.
- இப்பாடத்தை நான்கு பகுதிகளாகப் பிரித்து, எத்தனைப் பாடவேளைகளில் இதனை நடத்தலாம் என்பதை முன்கூட்டியே முடிவு செய்து, அதற்கேற்றார் போல் இப்பாடத்தை பிரித்துக் கொள்ளவும்.

**பாடத்தின் நோக்கங்கள்**

- மனித ஏக்கங்கள் பற்றி குழந்தைகள் அறிந்து கொள்ளல்.
- ஒவ்வொரு மனிதருக்குள்ளும் ஏதோ ஒரு வகையான ஏக்கம் இருக்கிறது என்ற புரிதலை உருவாக்குதல்.
- நமது தேவைகள் எவ்வாறு பல்வேறு ஏக்கங்களாக மாறுகின்றன என்பதை உணர்ந்து கொள்ளல்.








நமது வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளை நம்மால் பூர்த்தி செய்ய இயலாதபோது, அவை நம் ஆழ் மனதில் ஏக்கங்களாகப் படிகின்றன. இதுவே இப்பாடத்தின் மையக் கரு.

இப்பாடத்தைக் கீழ்க்கண்டவாறு நான்கு பகுதிகளாகப் பிரித்து பல்வேறு கற்றல் வழிகளைப் பயன்படுத்திப் பாடத்தின் நோக்கத்தைக் குழந்தைகள் புரிந்துகொள்ள ஆசிரியர்கள் முயற்சிக்கலாம். இங்கு கொடுக்கப்பட்ட வடிவங்கள் மட்டுமே இறுதியானவை அல்ல. கூடுதலாக பொருத்தமான கற்றல்முறைகளையும்இவற்றோடு இணைந்துக் கொண்டு சிறப்பாக வகுப்புகளை கொண்டு செல்லலாம்.




**பகுதி - 1**

’மனித ஏக்கங்கள்’ என்ற கருத்தைக் குழந்தைகளிடம் எளிமையாகப் புரியவைக்க ‘‘செடிக்கும் உயிர் இருக்கா’’ என்ற உரையாடல் வழியாக ஏக்கங்களை மின்னனு திரையின் வாயிலாக அல்லது காணொளி வழியாக பாடத்தைத் திரையிடலாம் அல்லது குழந்தைகளே சிறுநாடகமாக நிகழ்த்திக் காட்டச் சொல்லலாம். இறுதியாக ஆசிரியர் அது குறித்து தெளிவான விளக்கம் அளித்து அந்த வகுப்பறையை நிறைவு செய்யலாம்.

**பகுதி - 2**

ஏக்கங்களை மேலும் புரிந்துகொள்ள இரண்டு உண்மை நிகழ்வுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வுண்மை நிகழ்வுகள் இரண்டையும் குழந்தைகளை வாசிக்கச் சொல்லலாம். வாசித்தபிறகு, குழந்தைகள் தங்களது சொந்த அனுபவத்தில் இருந்து இதே போன்ற நிகழ்வுகள் தங்களுக்கு நடந்த அனுபவத்தையும் பகிரச் செய்யலாம். பின்னர் குழந்தைகள்அனைவரும் விவாதத்தில் பங்கேற்கச் செய்யலாம்.



**பகுதி - 3**

உண்மை நிகழ்வுகளைத் தொடர்ந்து பாடநூலில் உள்ள பலவகையான ஏக்கங்களை குழந்தைகளின் அனுபவங்களுடன் இணைத்து உரையாடல் வழியாக அவர்களுக்கு விளக்கலாம்.










**பகுதி - 4**

ஏக்கங்கள் என்றால் என்ன? அதன் பலவிதமான பரிமாணங்கள் மற்றும் அதன் விளைவுகளை தக்க சான்றுகளுடன் புரியவைத்தபிறகு, கொடுக்கப்பட்டுள்ள ஆறு வகையான பயிற்சிகளை குழந்தைகள் புரிந்து, முழுமையாக உணர்ந்து, அவர்கள் பங்கேற்று, பகிரச்செய்த பிறகு குழந்தைகளிடம் ஏற்பட்ட கற்றல் விளைவுகளைக் கேட்டு நிறைவு செய்வது மிகச் சிறப்பாக அமையும்.


**குழந்தைகளிடம் எதிர்பார்க்கப்படும் விளைவுகள்:**




- மனிதர்களுக்குள் இருக்கும் ஏக்கம் குறித்த புரிதல் குழந்தைகளிடம் ஏற்படும்.
- பலவகையான ஏக்கங்களை தங்கள் அனுபவங்கள் வாயிலாக குழந்தைகள் புரிந்துகொள்வர்.
- பிறர்நிலை உணர்ந்து செயல்படும் மனநிலையை வளர்த்துக் கொள்வர்.
- குழந்தைகள் விமர்சனக் கண்ணோட்டத்தை வளர்த்துக் கொள்வர்.

சிலருக்கு ஏக்கங்கள் நிறைவேறுவதையும், பலருக்கு நிறைவேறாமல் இருப்பதையும் குழந்தைகள் உணருகிறார்களா என்பதை அறிய முயல வேண்டும். இப்பாடத்தை நடத்தி முடித்தப் பின்னர், ஆசிரியராகிய நீங்கள் இதனை கையாண்ட வழிமுறையையும், குழந்தைகள் இவ்வகுப்பில் உங்களோடு பகிர்ந்து கொண்டவற்றையும், ஏற்பட்ட தாக்கங்களையும் உங்கள் அனுபவமாக பிற ஆசிரியர்களோடும், தலைமை ஆசிரியரோடும், அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டப் பொறுப்பாளரோடும் பகிர்ந்து கொள்வது சிறப்பாக இருக்கும்.










அத்தியாயம் 1 : இயல்புகள்

# 2. சமூக வாழ்வு








## 2. சமூக வாழ்வு

**அன்பிற்குரிய ஆசிரியர்களே!**

இப்பாடத்தை குழந்தைகள் இலகுவாகப் புரிந்து கொள்ள தாங்கள் பலவகையான யுக்திகளுடன் பாடத்தைக் கொண்டு செல்ல வாழ்த்துகிறோம்.




**பாடத்தின் நோக்கங்கள்**

- சமூக வாழ்வின் தேவைகளையும் அதன் அடிப்படைக் கூறுகளையும் புரிந்து கொள்ளுதல்.
- மனிதன் ஒரு "சமூக விலங்கு" என்பதால், மனிதர்கள் சமூகத்தின் அங்கமாக வாழ்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ளுதல்.

மேற்கண்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மனித வாழ்வின் அற்புதமான பண்பான "கூடி வாழ்தல்" என்ற கருத்தை குழந்தைகள் எளிமையாகப் புரிந்து கொள்ள இப்பாடத்தினை பல்வேறு கற்றல்-கற்பித்தல் முறைகளைக் கொண்டு விளக்குவது அவசியம்.



**பகுதி - 1**

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்பார்கள். நாம் வாழும் சமூகம் எத்தன்மையது என்பதை குழந்தைகளின் பேருந்துப் பயண உரையாடல் மற்றும் உற்றுநோக்கலின் வாயிலாக விளக்குவது நன்று. குழந்தைகளே இதனை நடித்துக் காட்டச் சொல்லலாம். இறுதியாக, தங்களின் விளக்கத்தைக் கூறி இம்முதல் பகுதியை நிறைவுச் செய்து இரண்டாம் பகுதிக்குள் செல்லலாம்.




**பகுதி - 2**

சமூக வாழ்வின் அடிப்படைக் கூறுகளை எளிமையாக விளக்கிய பிறகு, குழந்தைகளைச் சிறு குழுக்களாகப் பிரித்து, கொடுக்கப்பட்டுள்ள மூன்று கேள்விகளை அடிப்படையாகக் கொண்டு விவாதிக்கச் சொல்ல லாம். ஒவ்வொரு குழுவும் தங்கள் கருத்துக்களை வகுப்பறையில் பகிர்ந்து கொள்ளச் செய்யலாம். இறுதியாக, சமூக வாழ்வின் முக்கியத்துவதை எடுத்துக் கூறி விவாதத்தை நிறைவு செய்யலாம்.

**பகுதி - 3**

சமூக வாழ்வை மேலும் புரிந்து கொள்ளும் வகையில் சென்னை பெரு வெள்ளத்தின் போது மாந்த நேயத்துடன் மக்கள் ஒருவருக்கொருவர் உதவிய விதத்தையும் மீண்டும் தங்களது இயல்பு நிலைக்கு மக்கள் திரும்பக் காரணமாக இருந்ததையும் விளக்கவும். பின்னர் சிந்தனைக்கான கேள்விகளை விவாதிக்க வைத்து இப்பகுதியை நிறைவுச் செய்யலாம்.

**பகுதி - 4**

பயிற்சிப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள ஏழு பயிற்சிகளை குழந்தைகள் அனைவரும் பங்கேற்கும் வகையில் இனிமையாகக் கொண்டு செல்லலாம். குறிப்பாக பட்டிமன்றம், உரைவீச்சு, கவிதை எழுதுதல், படம் வரைதல் போன்ற வழிமுறைகளைப் பயன்படுத்தி எளிமையாக கொண்டு செல்லலாம். இறுதியில் சமூக வாழ்வின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி அமர்வை நிறைவு செய்யலாம்.

**குழந்தைகளிடம் எதிர்பார்க்கப்படும் விளைவுகள்:**

- சமூக வாழ்வைப் புரிந்து கொள்வர்.
- சமூகத்தின் பல்வேறு அடிப்படைக் கூறுகளை குழந்தைகள் அறிந்து கொள்வர்
- தங்களுக்குள் இருக்கும் படைப்பாற்றல் திறன்களை மேம்படுத்திக் கொள்வர்
- பிறர் நிலையை அறிந்து செயல்படும் உணர்வினை தங்களுக்குள் உருவாக்கிக் கொள்வர்.
- குழந்தைகள் தங்களது விமர்சனக் கண்ணோட்டத்தை வளர்த்துக் கொள்வர்.
- குழந்தைகள் கூடி வாழ்தலின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்வர்.




அத்தியாயம் 1 : இயல்புகள்

# 3. பன்மைச் சமூகம்









# 3. பன்மைச் சமூகம்


**அருமை ஆசிரியர் பெருமக்களே,**

சமூக வாழ்வு என்பது மக்களின் இயல்பான வாழ்வு. சமூகத்தில் வாழும் மனிதன் ஒற்றைச் சமூகத்தில் வாழ்வதில்லை. அவன் வாழும் சமூகம் பன்மைத் தன்மையுடையது. இந்தியச் சமூகம் பல்வேறு இனத்தவர்கள், பல்வேறு மொழி பேசும், பல்சமயங்களைப் பின்பற்றும் தொன்மையான பண்பாட்டுக் கூறுகளை தன்னகத்தே கொண்டுள்ளது என்பதை தாங்கள் அறிவீர்கள். இப்பன்மைச் சமூகத்தின் அடிப்படையைப் புரிந்து கொண்டு, அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை விழுமியங்களான சமத்துவம், மனித மாண்பு, சகிப்புத் தன்மை மற்றும் சகோதரத்துவம் தொடர்ந்து தழைத்தோங்கும் சமூகமாக வளர வகுப்பறையே மிகச் சிறந்த பட்டறை என்ற உணர்வுடன் வகுப்பறைச் செயல்பாடுகளுக்குள் செல்வது நன்று.

**பாட நோக்கங்கள்**

- பன்மைச் சமூகம் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ளுதல்.
- பன்மைச் சமூகத்தின் அடிப்படைப் பண்புகளை விளங்கிக் கொள்ளுதல்.
- பன்மைச் சமூகத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளுதல்.

“**வேற்றுமையில் ஒற்றுமை**” என்ற அரசமைப்புச் சட்டத்தின் உயரிய மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்ட இப்பாடத்தை குழந்தைகள் இயல்பாக புரிந்து கொள்ளும் வகையில் தக்க சான்றுகளுடன் பல்வேறு கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி மேற்கண்ட நோக்கங்கள் குழந்தைகளிடம் சென்றடைய முயற்சி செய்யவும்.









**பகுதி-01**

வகுப்பறையில் பாடத்தின் நோக்கத்தை தெளிவுபடுத்திய பிறகு, குழந்தைகள் அனைவரும் இணைந்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர் உரையாடல் பகுதியை ஒரு நாடகமாக நடித்துக் காட்டலாம்.

**பகுதி - 02**

உரையாடலைத் தொடர்ந்து, இரண்டாவது பகுதியில் இரண்டு நிகழ்வுகளை குழந்தைகளை வாசிக்க சொல்லி அதன்கீழ் கொடுக்கப்பட்டுள்ள சிந்தனைக்கான கேள்விகளைக் குழந்தைகளிடம் கேட்டு அவர்களிடம் உரையாடலைத் தொடருங்கள். இக்கதைகள் போல் குழந்தைகளுக்குத் தெரிந்த கதைகள் இருந்தால், அவற்றையும் அவர்கள் பகிர்ந்து கொள்ளுமாறு வாய்ப்பளிக்கவும். இறுதியாக **“ஊர் கூடி தேர் இழுத்தல்”** என்று ஏன் கூறுகிறார்கள் என்பதை விவாதித்து பன்மைச் சமூகத்தின் அடிப்படைப் பண்புகளை குழந்தைகளின் மனதில் நிறுத்தி உரையாடலை நிறைவு செய்யலாம்.

**பகுதி - 03**

பயிற்சிப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள ஏழு வகையான பயிற்சிகளை குழந்தைகள் பங்கேற்கும் வகையில் ஈடுபடுத்தி அவர்கள் இக்கருத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள உதவுதல்.

**பகுதி - 04**

குழந்தைகளை பல குழுக்களாகப் பிரித்து வேற்றுமையில் ஒற்றுமை மற்றும் பன்மைச் சமூகத்தின் பயன்களை கருவாகக் கொண்டு நாடகமாக நடித்துக் காட்டச் சொல்லலாம். மேலும் கணியன் பூங்குன்றனார் அவர்கள் எழுதிய புறநானூற்றுப் பாடலான ‘‘யாதும் ஊரே யாவரும் கேளீர்’’ என்ற பாடலை பாடிக்காட்டிய பிறகு அதன் பொருளை விளக்கி இப்பாடத்தை நிறைவு செய்யலாம்.



**குழந்தைகளிடம் எதிர்பார்க்கப்படும் விளைவுகள்:**

- பன்மைச் சமூகம் என்றால் என்ன என்பதை புரிந்து கொள்வர்.
- பன்மைச் சமூகமாக வாழ்வதன் அவசியத்தை குழந்தைகள் உணர்ந்து கொள்வர்











- சமூகத்தில் இணக்கமாக “**கூடி வாழ்தலின்**” முக்கியத்துவத்தை புரிந்து கொள்வர்.
- தங்களுக்குள் இருக்கும் படைப்பாற்றல் திறன்களை வளர்த்துக் கொள்வர்
- பன்மைச் சமூகத்தில் நிலவும் பல்வேறு சமூகங்களின் இருப்பை, அவற்றின் தனித்துவத்தை, அடையாளங்களை மதிக்கவும், ஏற்கவுமான மனநிலையை வளர்த்துக் கொள்வர்.









அத்தியாயம் 1 : இயல்புகள்

# 4. மனித மாண்பு








# 4. மனித மாண்பு

**அருமை ஆசிரியர் பெருமக்களே,**

மானுட மாண்பு இயற்கையானது; அனைவருக்குமானது. ‘‘மனித மாண்பு’’ அடிப்படையான மனித உரிமை என்று பன்னாட்டு மனித உரிமைச் சட்டங்களும் நமது அரசமைப்புச் சட்டமும் வரையறுத்துள்ளன. எனவே மானுட மாண்பை குழந்தைகள் புரிந்து கொள்ளும் வகையில் வகுப்பறையில் பல்வேறு யுக்திகளுடன் கொண்டுச் செல்லவும்.


**பாட நோக்கங்கள்**

- மனித மாண்பு இயல்பானது, அனைவருக்குமானது என்பதை புரிந்து கொள்ளுதல்.
- மனித மாண்பின் முக்கியத்துவதை உணர்ந்து கொள்ளுதல்.
- மனித மாண்பை சான்றுகளுடன் அறிந்து கொள்ளுதல்.

**பகுதி - 01**

ஆசிரியர்களே,

மேற்கண்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ‘‘மனித மாண்பை’’ குழந்தைகள் எளிமையாகப் புரிந்து கொள்ள முயற்சி செய்யவும். மனித மாண்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள தேசத் தந்தை மகாத்மா காந்தி, அண்ணல் அம்பேத்கர் மற்றும் அமெரிக்க கறுப்பின குடிமைச் சமூக போராளி ரோசா பார்க்ஸ் ஆகியோரின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களை வாசிக்கச் சொல்லி குழந்தைகளுக்குப் புரிய வைக்கலாம் அல்லது அவர்கள் பற்றிய குறும்படங்களை திரையிட்டு அதன் வாயிலாகவும் புரிய வைக்க முயற்சி செய்யலாம்.




**பகுதி - 02**

குழந்தைகளை ஐந்து குழுக்களாகப் பிரித்து, பாடநூலில் உள்ள உண்மை நிகழ்வுகளைக் கொடுத்து விவாதிக்கச் சொல்லலாம். பிறகு வகுப்பறையில் ஒவ்வொரு குழுவாக தாங்கள் விவாதித்த கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளலாம். இறுதியாக ஆசிரியர் மனித மாண்பின் முக்கியத்துவதை எடுத்துக் கூறி நிறைவு செய்யலாம்.

**பகுதி - 03**

மனித மாண்புடன் தொடர்புடைய கொடுக்கப்பட்டுள்ள 10 வகையான பயிற்சிகளை குழந்தைகள் ஒவ்வொன்றாக செய்திட ஊக்கப்படுத்துங்கள்.

**குழந்தைகளிடம் எதிர்பார்க்கப்படும் விளைவுகள்**

- மனித மாண்பின் இயல்புகளைப் புரிந்து கொள்வர்.
- பிறருடன் தொடர்பு கொள்ள வேண்டிய திறனை வளர்த்துக் கொள்வர்.
- மனித மாண்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்வர்.







அத்தியாயம் 2 : முரண்கள்

# 5. முன்தீர்மானம்









# 5. முன்தீர்மானம்

**மதிப்பிற்குரிய ஆசிரியர் பெருமக்களே!**

அரசமைப்புச் சட்டம் உறுதி செய்துள்ள உயரிய மானுட மதிப்பீடுகளை “இயல்புகள்” என்ற முதல் அத்தியாயத்தில் பார்த்தோம். இம்மானிட மதிப்பீடுகள் எதிர்மறையான எண்ணங்களாலும் பல்வேறு வெளிப்பாடுகளாலும் எவ்வாறு சிதைக்கப்படுகிறது என்பதைக் குறித்து “முரண்” என்ற இவ்விரண்டாவது அத்தியாயத்தில் பார்க்கப் போகிறோம். இவ்வத்தியாயத்தின் முதல் பாடமாக முன்தீர்மானம் அல்லது முன்முடிவு என்ற இப்பாடத்தை குழந்தைகள் எளிமையாகப் புரிந்து கொள்ளும் வகையில் கற்றல் -கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தவும்.

**பாட நோக்கங்கள்**

- முன்தீர்மானம் என்றால் என்ன என்பதை அறிந்து கொள்ளுதல்
- முன்தீர்மானத்தின் கூறுகளைப் புரிந்து கொள்ளுதல்.
- முன்தீர்மானத்தினால் ஏற்படும் பாதிப்புகளைத் தெரிந்து கொள்ளுதல்
- முன்தீர்மானக் கருத்துகளைத் தவிர்ப்பதற்கான வழிவகைகளை அறிந்து கொள்ளுதல்.



**பகுதி 01**

இம்முதல் பகுதியில் முன்தீர்மானம் என்றால் என்ன என்று பாடப் பகுதியில் உள்ள “எதிர் மனநிலை அல்லது தவறான எண்ணங்களுடன் பிறரை அணுகுவதே முன்தீர்மானம்” என்ற விளக்கங்களுடன் குழந்தைகளுக்கு புரிய வைக்க முயற்சி செய்வது அவசியம்.







### பகுதி 02

முதல் பகுதியைத் தொடர்ந்து முன்தீர்மான எண்ணங்களும் அதன் வெளிப்பாடுகளும் என்ற இப்பகுதியை குழந்தைகள் புரிந்து கொள்ளும் வகையில் மூன்று குழுக்களாக பிரித்து மூன்று உரையாடல்களையும் நாடகமாக நடித்துக் காட்டச் சொல்லலாம். பிறகு ஆசிரியர்கள் உரிய முறையில் விளக்கம் அளித்து இவ்விரண்டாவது பகுதியை நிறைவு செய்யலாம்.

### பகுதி 03

இப்பகுதியில் முன்தீர்மானக் கருத்து உருவாக அடிப்படையாக உள்ள காரணிகள் மற்றும் தோற்றுவாய் ஆகியன பற்றி குழந்தைகள் புரிந்து கொள்ள உதவிடுங்கள். தொடர்ந்து கொடுக்கப்பட்டுள்ள உண்மைச் சம்பவங்களை குழந்தைகள் குழுவாக வாசித்து தங்கள் கருத்துகளை வகுப்பில் பகிர்ந்து கொள்ளச் செய்யுங்கள்.

### பகுதி 04

இறுதியாக பயிற்சி பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள 6 பயிற்சிகளையும் பொறுமையாக விவாதித்து ஒன்றன் பின் ஒன்றாக குழந்தைகள் புரிந்து கொள்ளச் செய்யுங்கள்.

**குழந்தைகளிடம் எதிர்பார்க்கப்படும் விளைவுகள்:**

- முன்தீர்மானம் என்றால் என்ன என்று அறிந்து கொள்வர்.
- முன்தீர்மானத்தின் அடிப்படைத் தோற்றுவாய் மற்றும் அதன் காரணிகளைப் புரிந்து கொள்வர்.
- முன்தீர்மானக் கருத்துகள் மனதில் எழாமல் பார்த்துக் கொள்ளும் திறனை வளர்த்துக் கொள்வர்.
- பிறர் நிலை உணர்ந்து செயல்படும் திறனை வளர்த்துக் கொள்வர்.
- குழந்தைகள் தங்களது விமர்சன சிந்தனைத் திறனை வளர்த்துக் கொள்வர்.









அத்தியாயம் 2 : முரண்கள்

# 6. புண்படுத்தும் சொற்களும் துன்புறுத்தும் செயல்களும்








## 6. புண்படுத்தும் சொற்களும் துன்புறுத்தும் செயல்களும்

**மதிப்பிற்குரிய ஆசிரியர் பெருமக்களே!**

முதல் அத்தியாயத்தில் மனிதர்களின் இயல்புகளைப் பார்த்தோம். இவ்வியல்பான பண்புகள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதை இவ்வத்தியாயத்தில் பார்க்கப்போகிறோம். மனிதர்களின் இயல்பான குணங்களை முன்தீர்மானம் என்ற எதிர்மறையான எண்ணம் எவ்வாறு பாதிக்கக் காரணமாக உள்ளது என்பதைப் பார்த்தோம். இப்பாடத்தில் இம்முன்தீர்மானக் கருத்துகள் எவ்வாறு புண்படுத்தும் சொற்களாகவும் துன்புறுத்தும் செயல்களாகவும் மாறுகிறது என்பதைக் குழந்தைகள் மிக எளிமையாக புரிந்து கொள்ளும் வகையில் பாடத்தைக் கொண்டு செல்லுவது அவசியம். இப்பாடம் இரண்டு பகுதிகளைக் கொண்ட சற்று நீண்ட பாடமாகும். எனவே இப்பாடத்தை எத்தனை பாடவேளைகளில் நடத்தலாம் என்பதை நன்கு திட்டமிட்ட பிறகு பாடத்திற்குள் செல்லுவது சரியாக இருக்கும்.

**பாட நோக்கங்கள்**

- புண்படுத்தும் சொற்கள், துன்புறுத்தும் செயல்கள் ஆகியவற்றின் விளைவுகளைப் புரிந்து கொள்ளுதல்.
- துன்புறுத்தும் செயல்களை சான்றுகளுடன் தெரிந்து கொள்ளுதல்.
- ஊக்கப்படுத்தும் சொற்களையும் செயல்களையும் வாழ்நெறியாகக் கற்றுக் கொள்ளல்.



மேற்கண்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு பாடத்தினை கீழ்க்கண்டவாறு பிரித்து வெவ்வெறு பாடவேளைகளில் நடத்திடுவது நன்று.







**பகுதி - 1**

“புண்படுத்தும் வார்த்தைகள்” என்றக் கருத்தைக் குழந்தைகள் புரிந்து கொள்ள உரையாடல் முழுவதையும் குழந்தைகள் நாடகமாக நிகழ்த்திக் காட்ட ஊக்கப்படுத்த வேண்டும். உரையாடலுடன் கொடுக்கப்பட்டுள்ள குறள்கள் மற்றும் உண்மை நிகழ்வுகளைக் கொண்டு புண்படுத்தும் சொற்களைப் புரிந்து கொள்ள உதவிடுவது அவசியம். இறுதியாக புண்படுத்தும் சொற்களின் எதிர்மறை தாக்கத்தினை விளக்கி இப்பாடவேளையை நிறைவு செய்யலாம்.

**பகுதி - 2**

நமக்குள் எழும் எதிர்மறையான எண்ணங்களே வன்மமாக மாறி பலவேளைகளில் பிறரைப் புண்படுத்தும் வகையிலான சொற்களாக வெளிப்படுகின்றன. இவ்வெதிர்மறை எண்ணங்களைத் தவிர்த்து, நேர்மறையான எண்ணங்களை வளர்த்தெடுக்கும் வகையில், ஊக்கப்படுத்தும் சொற்களைப் பயன்படுத்த இப்பாடப் பகுதியை தக்க சான்றுகளுடன் விளக்கி குழந்தைகள் இதனைப் புரிந்து கொள்ள உதவிடுவது அவசியம்.

**பகுதி - 3**

இப்பகுதியில் “துன்புறுத்தும் செயல்கள்” என்ற இப்பாடப் பகுதியில் முன்தீர்மான எண்ணங்கள் எவ்வாறு சொற்களாக மாறி செயல் வடிவம் பெற்றுள்ளது என்பதை விளக்குவதே இப்பாடப் பகுதியின் நோக்கம்.

துன்புறுத்தும் செயல்களை எளிமையாகக் குழந்தைகளுக்கு விளக்க முயற்சி செய்ய வேண்டும். துன்புறுத்தும் செயல்களே மனித உரிமை அல்லது அரசமைப்பு உரிமை மீறல் என்பதை புரிய வைக்கவும். துன்புறுத்தும் செயல்களின் பல்வேறு வடிவங்களை குழந்தைகள் உணர வைக்க முயற்சி செய்ய வேண்டும்.

குழந்தைகள் எளிமையாக புரிந்து கொள்ள இப்பகுதியில் நான்கு உண்மை நிகழ்வுகள் கொடுக்கப்பட்டுள்ளன. குழந்தைகளை இந்த நான்கு நிகழ்வுகளையும் வாசிக்கச் சொல்லி அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் முயற்சி செய்யலாம்.




இறுதியாக கொடுக்கப்பட்டுள்ள சிந்தனைக்கான கேள்விகளை குழந்தைகளிடம் கேட்டு அதன் பொருளை அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். இறுதியாகப் பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பற்ற தொடுதல் குறித்த புரிதலைக் குழந்தைகளிடம் ஏற்படுத்தி இவ்வகுப்பை நிறைவுச் செய்யலாம்.

**பகுதி - 4**

இறுதிப் பகுதியான பயிற்சிகளை தனிப் பாடவேளையில் நடத்தலாம். ஏனெனில் இங்கு பத்து வகையான பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன. சில பயிற்சிகளைத் தனியாகவும் சில பயிற்சிகளைக் குழுவாகவும் சேர்ந்து செய்யும் வகையில் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு பயிற்சிக்குப் பிறகு குழந்தைகளோடு சிறு உரையாடலை நிகழ்த்துவது அவசியம்.

**குழந்தைகளிடம் எதிர்பார்க்கப்படும் விளைவுகள்:**

- புண்படுத்தும் சொற்கள் மற்றும் துன்புறுத்தும் செயல்கள் என்னவென்று அறிந்து கொள்வர்.
- புண்படுத்தும் சொற்கள் மற்றும் துன்புறுத்தும் செயல்களின் பல்வேறு வடிவங்கள் மற்றும் அவற்றின் காரணிகளைப் புரிந்து கொள்வர்.
- புண்படுத்தும் சொற்கள் அல்லது செயல்கள் ஒரு குறிப்பிட்ட சமூக மனிதரை நோக்கித்தான் நடத்தப்படுகிறதா அல்லது பொதுவாக அனைவர் மீதும் நடத்தப்படுகிறதா என்று அலசி ஆராய்வர்.
- ஒரு குறிப்பிட்ட சமூகத்தார் (சாதி, சமயம், இனம், மொழி) நோக்கி நடத்தப்படுகிறதென்றால் யார் அவர்கள் என்று அவர்களுக்குள் சிந்தனை உருவாகும்.
- ஊக்கப்படுத்தும் நேர்மறையான சிந்தனையைத் தங்களுக்குள் வளர்த்துக் கொள்வர்.
- பிறர் நிலை உணர்ந்து செயல்படும் திறனை வளர்த்துக் கொள்வர்.





அத்தியாயம் 2 : முரண்கள்

# 7. பிளவுபடும் சமூகம்









# 7 . பிளவுபடும் சமூகம்

**மதிப்பிற்குரிய ஆசிரியர் பெருமக்களே!**


முதல் அத்தியாயத்தில் மனிதர்களின் இயற்கையான இயல்புகளைப் பார்த்தோம். இரண்டாவது அத்தியாயத்தில் இயல்பான மனிதர்களிடத்தில் முரண்கள் ஏற்படக் காரணமான முன்தீர்மான எண்ணங்கள், சொற்கள் மற்றும் செயல்களாக எவ்வாறு மாற்றமடைகிறது என்பதைப் பார்த்தோம். இப்பாடத்தில் எதிரிடைப் பண்புகளாம் முன்தீர்மான எண்ணங்களும் செயல்களும் எவ்வாறு சமூகத்தை சிதைத்து, பிளவுப்படுத்துகிறது என்பதைப் பார்க்கப் போகிறோம்.

**பாட நோக்கங்கள்**

- மேற்கண்ட எதிரிடைப் பண்புகள் சமூகத்தில் ஏற்படுத்தும் விளைவுகளைத் தெரிந்து கொள்ளல்.
- சமூகம் எவ்வாறு பிளவுப்படுத்தப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ளுதல்.
- சமூகம் சிதைவுறாமல் பன்முகச் சமூக நல்லிணக்கத்தைப் பாதுகாப்பதற்கான வழிகளைக் காணுதல்.

மேற்கண்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு முதல் அத்தியாயத்திலும் இரண்டாம் அத்தியாயத்திலும் உள்ள மூன்று பாடங்களையும் தொடர்புபடுத்தி இப்பாடத்தைக் கொண்டுச் செல்வது சிறப்பாக அமையும்.








**பகுதி - 01**

“பாகுபாடு” என்றால் என்ன? பாகுபாட்டால் சமூகம் எவ்வாறு பிளவுபடுகிறது என்பதை பாடநூலில் உள்ள உண்மை நிகழ்வுகளுடன் விளக்கிக் கூற வேண்டும். இறுதியாகக் கொடுக்கப்பட்டுள்ள சிந்தனைக்கான கேள்விகளைக் கொண்டு குழந்தைகளிடம் உரையாடலை நிகழ்த்தி வகுப்பை நிறைவுச்
செய்யலாம்.

**பகுதி - 02**

பயிற்சிகள் பகுதியில் உள்ள பயிற்சி ஒவ்வொன்றாக எடுத்து குழந்தைகளுடன் சிறு விவாதத்தை நிகழ்த்தவும்.

- புதிய சொற்களை உரக்க வாசிக்கச் செய்து, அதன் பொருள் விளக்கத்தை குழந்தைகளுக்கு அளிக்கவும்.
- இரண்டாவது பயிற்சியில் கொடுக்கப்பட்டுள்ள கருத்தின் அடிப்படையில் அனைவரும் எழுதி வகுப்பில் அவர்களை பகிரச் செய்யவும்.
- உரக்கச் சொல்வோம் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள எட்டு முழக்கங்களையும் குழந்தைகள் உரக்கச் சொல்லச் சொல்லவும்.
- கொடுக்கப்பட்டுள்ள தலைப்பின் கீழ் குழுவாக அமர்ந்து ஓவியம் வரைந்து குழந்தைகளை அது குறித்து பகிர்ந்து கொள்ளச் செய்யவும்.
- சொல் மரம் வரைந்து சமூகம் பிளவுப்படாமல் இருக்க வேண்டிய கிளைகளையும் பிளவுப்படுதும் கிளைகள் குறித்த விபரங்களையும் நிரப்பி வகுப்பில் அவர்களை பகிரச் செய்யவும்.
- கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் ஏதாவது ஒன்றை தெரிவுச் செய்து குழுவாக அமர்ந்து மேடைப் பேச்சுக்கான கட்டுரையைத் தயார் செய்யச் சொல்லவும்.
- நம் நாட்டின் பன்மைக் கூறுகளை படம் வரைந்து அவர்களை வகுப்பில் பகிர்ந்து கொள்ளச் செய்யவும்.









- உங்கள் பகுதியில் நிகழும் பாகுபாடுகளைக் கருவாகக் கொண்டு ஓரங்க நாடகம் ஒன்றை குழந்தைகளை நிகழ்த்தச் சொல்லவும்.

**குழந்தைகளிடம் எதிர்பார்க்கப்படும் விளைவுகள்**

- பன்மைச் சமூகத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வர்.
- பிறருடன் தொடர்பு கொள்ளும் திறனை வளர்த்துக் கொள்வர்.
- சக மனிதரின் உணர்வுகளைப் புரிந்து கொள்வர்
- சமூக நல்லிணக்கத்தின் அவசியத்தை உணர்ந்து கொள்வர்.







## அத்தியாயம் 3 : அரண்கள்

# 8. இந்தியக் குடிமக்களாகிய "நாம்"








## 8. இந்தியக் குடிமக்களாகிய “நாம்”

**மதிப்பிற்குரிய ஆசிரியர் பெருமக்களே!**

முதல் அத்தியாயத்தில் மனிதர்களின் இயல்புகளைப் பார்த்தோம். இரண்டாம் அத்தியாயத்தில் அவ்வியல்புகள் எவ்வாறு பாதிக்கப்பட்டு, சமூகம் சிதைவுறுகிறது என்பதைப் பார்த்தோம். இவ்வத்தியாயத்தில் “இந்தியக் குடிமக்களாகிய நாம்” என்ற இப்பாடத்தின் வாயிலாக இந்திய அரசமைப்புச் சட்டம் எவ்வாறு இச்சமூகம் சிதைவுறாமல் பாதுகாப்புக் கேடயமாக உள்ளது என்பதைப் பார்க்கப் போகிறோம்.

**பாட நோக்கங்கள்**

- நமது உள்ளார்ந்த இயல்புகள் எவ்வாறு அரசமைப்பு உரிமைகளாகின்றன என்பதை அறிந்து கொள்ளுதல்.
- அரசாட்சிக்கும் மக்களாட்சிக்கும் இடையேயான வேறுபாட்டை அறிந்து, மக்களாட்சியின் மகத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல்.
- இந்திய அரசமைப்பின் உயரிய மதிப்பீடுகளை அறிந்து கொள்ளுதல்.




மேற்கண்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு யுக்திகளைப் பயன்படுத்தி இப்பாடத்தைக் குழந்தைகள் முழுமையாகப் புரிந்து கொள்ளும் வகையில் நேர்த்தியாக வகுப்பறைச் செயல்பாடுகளைக் கொண்டுச் செல்ல வேண்டும்.

**பகுதி – 01 மக்களாட்சியைப் புரிந்து கொள்ளுதல்**

இப்பகுதியில் மக்களாட்சி என்றால் என்ன என்பதை குழந்தைகள் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் பல்வேறு சான்றுகளுடன் விளக்க முயற்சி செய்யவும். பாடப் பகுதிகளை குழந்தைகளை



வாசிக்கச் சொல்லி விளக்கம் அளிக்கலாம். தொடர்ந்து மக்களாட்சியின் பண்புகளை ஒவ்வொன்றாக விளக்கி கூறவும்.

**பகுதி-02 மன்னராட்சியும் மக்களாட்சியும்**

மன்னராட்சியும் மக்களாட்சியும் என்ற இவ்விரண்டாவது பகுதியை குழந்தைகளே நாடகமாக நடித்துக் காட்ட ஊக்கப்படுத்தவும். இறுதியாக மன்னராட்சிக்கும் மக்களாட்சிக்கும் இடையேயான வேறுபாட்டை பாகுபலி திரைப்படக் கருத்துடன் ஒப்பிட்டு மக்களாட்சியின் மகத்துவத்தை எடுத்துக் கூறி நிறைவு செய்யலாம்.

**பகுதி-03 இந்திய அரசமைப்புச் சட்டம்**

இப்பகுதியில் இந்திய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட விதம், உருவாக்கத்தில் பங்கேற்றோர் மற்றும் அதன் முக்கியத்துவத்தை குழந்தைகளுக்கு எளிமையாக விளக்க முயற்சி செய்யவும். பிறகு இந்திய அரசமைப்பின் முகப்புரையை வாசிக்கச் சொல்லி அதன் பொருளை குழந்தைகள் முழுமையாக புரிந்து கொள்ள உதவ வேண்டும்.

‘‘இந்தியக் குடிமக்களாகிய “நாம்” என்ற கருத்தை ஆழமாக குழந்தைகள் மனதில் ஊன்றிட பல்வேறு முயற்சிகளை எடுக்க வேண்டும். குறிப்பாக குழந்தைகள் “நாம்” என்ற கருத்தை மையப்படுத்தி நாடகம் தயார் செய்து வகுப்பறையில், பள்ளியில் நிகழ்த்திக் காட்டச் சொல்லலாம். இறுதியாக மீண்டும் அரசமைப்பின் முக்கிய நோக்கங்களையும் அதன் மதிப்பீடுகளையும் நினைவுப்படுத்தி வகுப்பறைச் செயல்பாடுகளை நிறைவு செய்யலாம்.


**பகுதி-04**

இப்பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ள எட்டுப் பயிற்சிப் பகுதிகளை ஒவ்வொன்றாக குழந்தைகள் புரிந்து கொள்ளும் வகையில் அதற்கான நேரத்தை ஒதுக்கி, உரையாடலை நிகழ்த்தி வகுப்பறைச் செயல்பாடுகளை நிறைவு செய்யலாம்.



**குழந்தைகளிடம் எதிர்பார்க்கப்படும் விளைவுகள்:**

- இந்திய அரசமைப்பின் உயரிய மதிப்பீடுகளை குழந்தைகள் அறிந்து கொள்வர்.








- அரசாட்சிக்கும் மக்களாட்சிக்குமான வேறுபாடுகளை தெரிந்து கொள்வர்.
- வேறுபாடுகளை ஏற்று சகிப்புத்தன்மை மற்றும் சகோதரத்துவ பண்பை வளர்த்துக் கொள்வர்.
- அரசமைப்புச் சட்டத்தின் உயரிய மதிப்பீடுகளை ஏற்று நடக்கும் பொறுப்புள்ள குடிமக்களாக வளர்வர்.









# 9. குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம் - ஓர் அறிமுகம்









## 9. குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம் - ஓர் அறிமுகம்

“அரசமைப்பு உரிமைகளை குழந்தைகள் மத்தியில் பண்பாடாக வளர்த்தெடுப்போம்” என்ற இலக்கை முன் வைத்து, வான்முகில் அமைப்பின் முன்முயற்சியால் இந்த ஆண்டு தமிழகம் – புதுவையில் 17 மாவட்டங்களில் 125 கிராமங்களில் குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்கள் தொடங்கப்பட்டுள்ளன. ஏறக்குறைய 2700 குழந்தைகள் பங்கெடுக்கும் இக்கல்வித் திட்டத்தின் தொடக்க விழா 21 ஆகஸ்டு 2021 அன்று இணைய வழியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

**17 மாவட்டங்களில் 125 இடங்களில் அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்கள்**

இத்திட்டம் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், புதுச்சேரி, பெரம்பலூர், சேலம், ஈரோடு, தர்மபுரி, திண்டுக்கல், மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி போன்ற மாவட்டங்களில் பணிபுரியும் 10 அடித்தள அமைப்புகளோடு இணைந்து 125 குழந்தைகள் மையங்களில் முன்னெடுக்கப்படுகிறது. அரசுசாரா அமைப்புகள் நடத்தும் மாலை நேர குழந்தைகள் மையங்களில் மட்டுமல்லாது, பள்ளிகளிலும், மாணவர் விடுதிகளிலும் இந்த அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் கொண்டு செல்வதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் வே.வசந்திதேவி அவர்களின் வழிகாட்டலும் ஆதரவும் இத்திட்டத்திற்கு உந்துதலாகவும் ஊக்கமாகவும் உள்ளது.





## அரசமைப்பு உயர்த்திப் பிடிக்கும் உன்னத மதிப்பீடுகள்

சுதந்திரம், சனநாயகம், சமத்துவம், சமூகநீதி, சகோதரத்துவம், தனிநபர் மாண்பு, பன்மைத்துவம் போன்ற மதிப்பீடுகளை இந்திய அரசமைப்புச் சட்டம் உயர்த்திப் பிடிக்கிறது. ஆனால் இன்றைய இந்தியச் சூழலில் ஏற்றத்தாழ்வுகளும், சாதியப் பாகுபாடுகளும், சமயச் சண்டைகளும், சகிப்பின்மையும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே செல்கிறது. சுருங்கிவரும் சனநாயகப் பரப்பும், அதிகரித்து வரும் பாகுபாட்டுச் சிந்தனைகளும் பல்வேறு உரிமை மீறல்களுக்கும், வன்முறைகளுக்கும் வழிவகுக்கின்றன. எனவே அரசமைப்பு உயர்த்திப் பிடிக்கும் உன்னத மதிப்பீடுகளை குழந்தைகள் மத்தியில் வளர்த்தெடுக்கும் நோக்கில், இந்த அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம் கொண்டு செல்லப்படுகிறது. குழந்தைகளை பொறுப்புள்ள குடிமக்களாக உருவாக்கும் முயற்சியில் - சனநாயகத்திலும், மனித உரிமைகளிலும் நம்பிக்கை கொண்ட இளைய தலைமுறையை உருவாக்கும் எண்ணத்தில் - இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்தில் பங்கேற்கும் குழந்தைகள்

இத்திட்டத்தில் பங்குபெறும் குழந்தைகள் அனைவரும் 11 முதல் 15 வயதைச் சார்ந்தவர்களாவர். இவர்கள் நடுநிலை அல்லது உயர்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9 வகுப்பு வரை பயிலும் குழந்தைகள் ஆவர். நலிவுற்ற சமூகங்களிலிருந்து அனைத்து தரப்பட்ட குழந்தைகளும் இதில் பங்கு பெறுவர். குறிப்பாக ஆதிவாசிக் குழந்தைகள், அருந்தியர் குழந்தைகள், தலித் குழந்தைகள், சீர்மரபினர் குழந்தைகள், மீனவக் குழந்தைகள், மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகக் குழந்தைகள், சமயச் சிறுபான்மையினர் குழந்தைகள் போன்று பல்வேறுபட்ட குழந்தைகளும் பங்கேற்கும் இந்தத் திட்டத்தின் அடிநாதமாக இந்திய அரசமைப்பின் முகப்புரையும், அடிப்படை உரிமைகள் பகுதியும் அமையும்.



## அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களுக்கான பாடநூல்கள்

“இந்தியக் குடிமக்களாகிய நாம்”, “வாண்டுகள் பயணம்” என்ற தலைப்புகளில் இத்திட்டத்தில் பங்குபெறும் குழந்தைகளுக்கான இரு



பாடநூல்கள் தயாராகி உள்ளன. விளையாட்டுகள், செய்முறைப் பயிற்சிகள், பாடல்கள், கதைகள், மேற்கோள்கள், உண்மைச் சம்பவங்கள் போன்றவை மூலம் குழந்தைகளுக்கு எளிதாக புரியும் வகையிலும், குழந்தைகளின் முழுமையான பங்கேற்பை உறுதிசெய்யும் நோக்கிலும் பாடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. பத்துக்கும் மேற்பட்ட கல்வியாளர்களும், மனித உரிமை ஆர்வலர்களும் இணைந்து பல்வேறு கட்டங்களாக உருவாக்கிய இப்பாடநூல்கள் அச்சு வடிவில் மட்டுமல்லாது, மின்னணு வடிவிலும் வெளிவரவிருக்கிறது.

**அரசமைப்பு உரிமைக் கல்வி மன்ற நெறியாளர்களுக்கான பயிற்சி**

125 கிராமங்களில் குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களை வழிநடத்தும் நெறியாளர்களுக்கு கடந்த செப்டம்பர் 21, 22, 23 ஆகிய மூன்று நாட்கள் திருச்சியில் பயிற்சி வழங்கப்பட்டது. இதில் 17 மாவட்டங்களிலிருந்து 70 நெறியாளர்கள் கலந்து கொண்டனர். ஏற்கெனவே இக்கல்வி மன்றங்களுக்கான தயாரிப்புப் பணிகளை கிராம அளவில் மேற்கொண்ட இவர்களுக்கு அரசமைப்பு உரிமைகளைப் பற்றிய அடிப்படைப் புரிதலை உருவாக்கி, குழந்தைகள் மத்தியில் இக்கல்வியைச் சிறப்பாகக் கொண்டு செல்லத் தேவைப்படும் திறன்களை வளர்க்கும் நோக்கில் இப்பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பாடநூல்களை நெறியாளர்களுக்கு அறிமுகம் செய்து வைத்து, அவற்றை குழந்தைகளுக்கு எடுத்துச் செல்லத் தேவையான செய்முறைப் பயிற்சியும், அரசமைப்பு உரிமை கல்வி மன்றங்களின் இலக்கு, திசைவழி, நோக்கங்கள் மற்றும் செயற்திட்டங்கள் குறித்த தெளிவும் இப்பயிற்சியில் வழங்கப்பட்டுள்ளது.

**அரசுப் பள்ளிகளில் அரசமைப்பு உரிமைக் கல்வி**

தமிழ்நாட்டில் கொரோனா பெருந்தொற்று காரணத்தால் பள்ளிகள் கடந்த 18 மாதங்களாகத் திறக்கப்படவில்லை. இவ்வாண்டு நவம்பர் 1-ஆம் தேதி முதல் 1 முதல் 8 வகுப்புகள் வரையிலான வகுப்புகள் திறக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்தை அனைத்து அரசு பள்ளிகளிலும் கொண்டு செல்லும்




நோக்கில் பள்ளிக் கல்வித்துறை ஆணையாளர் திரு. நந்தகுமார் இ.ஆ.ப. அவர்களை நேரில் சென்று சந்தித்து இத்திட்டத்தை விளக்கியபோது, அவர் ஆர்வத்துடன் கேட்டறிந்து இதனைப் பரிசீலனை செய்வதாக கூறியுள்ளார். ஏற்கெனவே 26.08.2021 அன்று நடைபெற்றச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் இதே கோரிக்கையை வலியுறுத்தி மணப்பாறை சட்டமன்ற உறுப்பினரும் மனித நேய மக்கள் கட்சி பொதுச் செயலாளருமான திரு.அப்துல் சமது அவர்கள், கல்வி மானியக் கோரிக்கையின் போது பேசியது குறிப்பிடத்தக்கது. இதற்கான ஆக்கப்பூர்வமான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.




# 10. தமிழக அளவிலான தொடக்க விழாவில் மாண்புமிகு. சா.பீட்டர் அல்போன்ஸ் அவர்களின் சிறப்புரை




# 10. தமிழக அளவிலான தொடக்க விழாவில் மாண்புமிகு. சா.பீட்டர் அல்போன்ஸ் அவர்களின் சிறப்புரை

குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களின் தொடக்க விழாவில்
தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணைய தலைவர்
**மாண்புமிகு சா.பீட்டர் அல்போன்ஸ்** அவர்கள்,
21.08.2021 அன்று இணையவழியில் பேசிய உரை

அருமையான இந்தத் திட்டத்தை செயலாக்கத்திற்கு கொண்டு வந்துள்ள வான்முகில் அமைப்பிற்கு நெஞ்சார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் காலத்தில் எது மிக அதிகம் தேவையோ, இந்தக் காலத்தில் எது குழந்தைகளுக்கு நன்றாக இருக்கும் என்று எல்லோரும் எண்ணுகிறோமோ, எது கிடைத்தால் இந்த நாட்டின் எதிர்காலம் ஒளிமயமாக இருக்கும் என்று நாம் முழுமையாக எதிர்பார்க்கிறோமோ, அந்த எதிர்காலத் திட்டத்திற்கு ஒரு அடிப்படையான பணியைச் செய்கின்ற இந்த அருமையான முயற்சியை வான்முகில் அமைப்பினர் தொடங்கி இருக்கிறார்கள். நம் நாட்டின் அரசியல் சாசனச் சட்டத்தின் அறிவையும், அது உத்திரவாதப்படுத்தும் உரிமைகளையும், நமக்கு அது தருகின்ற அங்கீகாரத்தையும் குழந்தைகள் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டும் என்பதற்காக ஒரு அருமையான கல்வித் திட்டம் இன்று தொடங்கப்பட்டுள்ளது.

ஒருமிகப் பெரிய பயணத்தின் முதற்கட்டம் ஒரு சிறிய அடி என்று சொல்வது போல, நாளை இரண்டரைக் கோடி குழந்தைகளுக்கு இந்தக் கல்வி அறிவைப் புகட்டுவதற்கு முன்னோட்டமாக, ஒரு புதிய முனைப்பாக, புது முன்னெடுப்பாகத்தொடங்கப்படும் இந்த வரலாற்று புகழ் மிக்க தருணத்தில் நாம் அனைவரும் பங்கேற்பது










பெருமைக்குரியது. “அரசமைப்பு உரிமைகளை பண்பாடாக வளர்த்தெடுப்போம்” என்று அரசியல் அமைப்பு பற்றிய அறிவையும், புரிதலையும், அது நமக்கு வழங்கும் மிகப்பெரிய நன்மைகளையும் குழந்தைகளுக்கு வழங்கத் தயாராக உள்ளது.

சட்டத்தின்படி ஆட்சி நடக்காத நாட்டில், எவ்வளவு பெரிய கொடுமைகள் நடக்கும் – எப்படிப்பட்ட துயரங்கள் சம்பவிக்கும் – எப்படி மனித உயிர்கள் கொத்துக்கொத்தாக விலை பேசப்படும் – எவ்வளவு அநாகரிகமாக மனித உரிமைகள் நடத்தப்படும் – என்பதையெல்லாம் நாம் வாழும் போதே ஆப்கானிஸ்தானில் பார்க்கின்றோம். சட்டத்தின் ஆட்சி தோற்றுப் போகும் போது – இன்னும் தெளிவாகச் சொன்னால் – அரசியல் சாசனம் என்று ஒன்று இல்லாத அரசாங்கம் இருக்கும் போது, அதில் யார் அதிகமாக பாதிக்கப்படுவார்கள் என்பதைப் பார்ப்பதற்கு இன்றைய ஆப்கானிஸ்தான் தான் மிகப் பெரிய எடுத்துக் காட்டு.

அங்கு கையில் இருக்கும் குழந்தைகளை அந்தத் தாய்மார்கள் விமான நிலையத்தின் மதில் சுவருக்குமேல் தூக்கி எறியும் போது, “என் குழந்தையாவது சுதந்திரக் காற்றை சுவாசிக்கட்டும்; என் குழந்தையாவது ஒரு சமத்துவ நாட்டில் இருக்கட்டும்; என் குழந்தையாவது மனித உரிமைகளை பெறுகின்ற ஒரு மண்ணில் உயிர் வாழட்டும்”, என்று அந்த தாய்மார்கள் குழந்தைகளை தூக்கிப் போடுகின்ற போது, அந்தக் குழந்தைகளைப் பிடிக்கின்ற பிரிட்டிஷ் இராணுவ வீரர்களின் கண்ணில் கண்ணீர் கசிவதும், அரசியல் சாசனச் சட்டம் எவ்வளவு முக்கியம் என்பதை நமக்கெல்லாம் உணர்த்தும் என எண்ணுகிறேன்.



இந்தியாவை ஒரு சுதந்திர நாடாக ஆக்கிக் கொடுத்ததன் மாபெரும் பயன் நமக்குக் கிடைத்திருக்கும் சட்டத்தின் ஆட்சி. இந்தியாவில் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த நம் முன்னோர்கள், சுதந்திரத்தோடு தங்கள் பயணத்தை நிறுத்திக் கொள்ளவில்லை; மாறாக சுதந்திரத்திற்குப் பின்னால் இந்தியா எப்படி இருக்க வேண்டும் என்பதை தங்கள் கற்பனைகளிலே சிந்தித்தார்கள்; தங்கள் எண்ணங்களில் தேக்கினார்கள்; ஒவ்வொரு நாளும் இரவு படுக்கும்



பொழுது கனவு கண்டு, இப்படிப்பட்ட இந்தியாவை உருவாக்க வேண்டும் என்று கனவு கண்டார்கள். அதைத் தான் நம் முன்னாள் பிரதமர், "கூாந ஜனுநுஹ டிக ஜனேயை" என்று சொல்லுவார். இந்தியா என்பது ஒரு நாடு மட்டுமல்ல; இந்தியா என்பது பெரிய தத்துவம்; இந்தியா என்பது ஒரு கருத்தியல்; இந்தியா என்பது ஒரு மிகப்பெரிய அரசியல் ஏற்பாடு என்பதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. அதற்கு எல்லாவிதமான பரிமாணங்கள் இருக்கின்றன. அது முழுமையான மனித வளர்ச்சியை பார்க்க வேண்டிய ஒரு மிகப்பெரிய தேடுதல். அதற்கு ஆதாரமாக இருக்கக் கூடியதுதான் இந்த நாட்டினுடைய அரசியல் சாசனச் சட்டம்.


எந்த மதத்தைச் சார்ந்த பள்ளிகளாக இருந்தாலும், எந்த எண்ண ஓட்டத்தைப் பின்புலமாக கொண்டவர்களாக இருந்தாலும், எந்தத் தத்துவத்தை உள்வாங்கியவர்களாக இருந்தாலும், அந்தப் பள்ளிக் கூடங்களிலே கண்டிப்பாக சொல்லிக் கொடுக்க வேண்டிய பாடம், இந்திய நாட்டின் அரசியல் சாசனச் சட்டம். அந்த அரசியல் சாசனச் சட்டஅறிவும், அதனுடைய புரிதலும் தான் - ஒரு முழுமையான குடிமகனை உருவாக்க முடியும் என்கிற மிகப்பெரிய தத்துவத்தை நாம் 70 ஆண்டுகளாக உணரவில்லை. நான் சட்டக் கல்லூரி வந்த பிறகு தான் இந்திய அரசமைப்புச் சட்டப் புத்தகத்தைப் பார்த்தேனே தவிர, அதையும் கூட முழுமையாக சட்டக் கல்லூரிக்குள் படிக்கின்ற வாய்ப்பைப் பெறவில்லை.

அரசியல் சட்டம்தான் மண்ணில் எல்லாவற்றையும் முடிவு செய்கிறது. இந்த நாட்டில் கலாச்சாரம் எப்படி இருக்க வேண்டும், இந்த நாட்டிலே தேர்தல்கள் எப்படி நடக்க வேண்டும், இந்த நாட்டில் ஆட்சி முறைகள் எப்படி அமைய வேண்டும், இந்த நாட்டிலே மனித உரிமைகள் எவ்வாறு பேணப்பட வேண்டும் என்று அனைத்து கோணங்களையும் ஆராய்ந்து, அவை முறையாக நடக்க வேண்டிய அதிகாரமிக்க நூல்தான், இந்திய நாட்டின் அரசியல் சாசனச் சட்டம். அந்த அரசியல் சாசனச் சட்டத்தை பற்றி நம்முடைய குழந்தைகள் படிக்க வேண்டாமா?




இந்த உலகத்திலே 796 அரசியல் சட்டங்களைப் பற்றி ஆராய்ந்தார்கள். இந்த அரசியல் சாசனச் சட்டங்கள் உருவானவிதம், அவை உருவாக்கப்பட்ட விதம், உருவாக்கியவர்களின் பின்னணி போன்றவற்றை ஆராய்ந்த பின்பு, அரசியல் சாசனச் சட்டம் எத்தனை நாள் அந்த நாடுகளிலேஅமலில்இருந்ததுஎன்றெல்லாம் ஆராய்ந்தபொழுது, 50 விழுக்காடு அரசியல் சாசனச் சட்டங்கள் 17 ஆண்டுகளைத் தாண்டவில்லை என்ற உண்மை புலப்படுகிறது. 50 ஆண்டுகளைத் தாண்டிய அரசியல் சாசனச் சட்டங்கள் ஏறக்குறைய ஐந்து விழுக்காடுதான். பிறந்த இரண்டாவது வருடமே மரித்துப்போன அரசியல் சாசனச் சட்டங்கள் ஏறக்குறைய 35 விழுக்காட்டிற்கு மேலே. ஆகவே சராசரியாக பார்க்கின்ற பொது ஒரு அரசியல் சாசனச் சட்டத்தின் வயது 17 ஆண்டுகள்தான். ஆனால் இந்தியாவின் அரசியல் சாசனச் சட்ட வயது எழுபது. நூறு ஆண்டுகளை இந்த அரசியல் சாசனச் சட்டத்தை வைத்து தொட்டு விடுவோம். ஏனெனில் நம் அரசியல் சாசனச் சட்டம் நம் எண்ணங்களுக்கும், ஆசைகளுக்கும், காலத்தின் தேவைக்கும் ஏற்ப வளைந்து கொடுக்கக் கூடிய நெகிழ்வுத் தன்மை கொண்டது. மிகுந்த இறுக்கமாக இல்லாது, எதையும் ஏற்றுக் கொண்டு எல்லோரையும் ஒரே தராசில் எடைப் போடக்கூடிய ஒரு ஒப்பற்ற ஆய்வு நடத்தப்பட்டு பரிபூரணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது தான் நம் அரசியல் சாசனச் சட்டம்.


இப்பொழுது மிகப்பெரிய அச்சுறுத்தல் என்பது நம் அரசியல் சாசனச் சட்டத்தின் மீதுதான் ஏற்பட்டுள்ளது. அரசியல் சாசனச் சட்டம் கொடுத்த மிகப்பெரிய நன்கொடை சனநாயகம். சனநாயகம் தேர்ந்தெடுக்கின்ற ஒரு பாசிசம் -மிகப்பெரிய பாசிச வழிமுறைகளும், அணுகுமுறைகளும், பாசிச சித்தாந்தங்களும் சனநாயகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவது ஒரு மிகப்பெரிய ஆபத்தான காலக்கட்டம் இது. டாக்டர் பாபாசாகிப் அம்பேத்கர் அவர்கள், ‘‘இந்த அரசியல் சாசனச் சட்டம் சட்டத்தால் அல்ல; அந்த அரசியல் சாசனச் சட்டம் யாருடைய கையில் உள்ளது என்பதைப் பொறுத்துத் தான் அதன் வெற்றியும் தோல்வியும்’’ என்று சொல்லுவார்.




ஆகவே வளரக்கூடிய இளம் தலைமுறையினரிடம் இந்த அரசியல் சாசனச் சட்டத்தை பத்திரமாக ஒப்படைக்க வேண்டும். அவர்களுக்கு இது குறித்த சரியான புரிதலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய மூன்றும் இந்திய அரசியல் சாசனச் சட்டம் உருவாக்கி தருகின்ற சமூகத்தின் முப்பரிமாணம் என்று சொல்கிறோம். ஆனால் ஒரு சமத்துவமான சமூகத்தை நோக்கி இதன் பயணம் இருக்கிறதா என்றால் இல்லை. 50 ஆண்டுகளுக்கு முன்னால் தீண்டாமைச் சுவர் எவ்வாறு வகுப்பறைக்குள் இருந்ததோ, அதைப் போல இன்று தொழில் நுட்பச் சுவர் இன்று நம் வகுப்பறைக்குள் உள்ளது. படிக்கின்ற மாணவர்களுக்கு மத்தியிலே இரண்டு பகுதிகளாக இருக்கிறார்கள். ஒருவர் கையிலே எல்லா வசதிகளையும் பெற்ற ஒரு ஸ்மார்ட்போன், அவர் இல்லத்தில் மிகப்பெரிய றகைக வசதி, இன்னொரு புறம் இம்மாதிரியான கருவிகளை வாங்கக்கூடிய வசதியோ, அதை புரிந்து கொள்ளகூடிய அறிவோ, அதைச் சொல்லித்தரக்கூடிய பெற்றோர்களோ இல்லாத ஒரு கூட்டம். ஒரு சமத்துவமற்ற சமூகமாக இருப்பதை நாம் பார்க்கிறோம். அதைப் போல் வாய்ப்புகளும் சமமானதாக இல்லை.

அதிகாரமும் ஆட்சியும் யாருடைய கையில் இருக்கிறது என்று பார்த்தால்,சில குறிப்பிட்ட நபர்களின் கையில்தான் இருக்கின்றது. அதிகாரப் பரவலாக்கம் செய்ய - அரசியல் சாசனச் சட்டம் சொல்கின்ற வழிமுறைகளின்படி இவற்றை எல்லாம் பெறுவது என்று வரும் தலைமுறையினருக்கு சொல்லி தரக்கூடிய மிகப்பெரிய பாடம். அந்தப் பாடத்தை சொல்லித் தருகின்ற முதல் படியாகத்தான் வான்முகில் முன்னெடுத்திருக்கும் இத்திட்டத்தைப் பார்க்கிறேன். இது நாம் எதிர்காலத்திற்கு செய்கின்ற மிகப்பெரிய முதலீடு. வான்முகில் அமைப்பைச் சார்ந்தவர்கள் அரசியல் சாசனச் சட்டத்தை நம் கிராமத்தில் இருக்கின்ற குழந்தைகளுக்கு, பல்வேறு சமூகப் பின்புலத்தில் இருந்து வருகின்றவர்களுக்கு, அவர்கள் சார்ந்து இருக்கின்ற மதங்கள், சார்ந்து இருக்கின்ற சமூகங்கள், சார்ந்து இருக்கின்ற பூகோளப் பகுதிகள், இப்படிப்பட்ட பின்புலங்களில் இருக்கின்ற மக்களுக்கு எடுத்துச் சொல்கின்ற பணி நாம் இதுவரையில்




செய்திராத - இப்போது செய்யப்படும் மிகப் பெரிய முதலீடு. மிக அருமையான இந்தத் திட்டத்தை எவ்வளவு தூரம் வெற்றிகரமாக ஆக்கப்போகிறோம் என்று திட்டமிட வேண்டும். இதற்கு அர்ப்பணித்து கொண்டிருக்கின்ற தன்னார்வத் தொண்டர்களுக்கும், அவர்களை ஒருங்கிணைக்கும் தலைவர்களுக்கும் என் மன்மார்ந்த வாழ்த்துக்கள்!




# 11. தமிழக அளவிலான தொடக்க விழாவில் முனைவர் வே. வசந்தி தேவி அவர்களின் சிறப்புரை





# 11. தமிழக அளவிலான தொடக்க விழாவில்
# முனைவர் வே. வசந்தி தேவி
## அவர்களின் சிறப்புரை

21.08.2021 அன்று மாலை இணைய வழியில் நடைபெற்ற குழந்தைகளுக்கான
அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களின் தொடக்க விழாவில்
திருநெல்வேலி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக
மேனாள் துணை வேந்தர் **முனைவர் வே. வசந்திதேவி** அவர்கள் ஆற்றிய உரை

வான்முகில் அமைப்பு முன்னெடுத்துள்ள அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்திற்கான முயற்சி என்பது சாதாரண முயற்சி அல்ல. இது பெருமளவிற்கு விரிவடைந்து, அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய, நமது சமுதாயத்தில் அரசியல் சாசனத்தின் அடிப்படை உரிமைகளை நிலை நிறுத்தக் கூடிய ஒரு பெரு முயற்சி! சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகளுக்குப் பிறகு தொடங்குகின்ற ஒரு புதிய முயற்சியாக இருக்கலாம். இது அரசின் முயற்சியாக மாறவேண்டும் என வலியுறுத்துகிறேன். 11 வயது முதல் 15 வயது வரை இருக்கின்ற குழந்தைகளுக்கு இளம் பருவத்திலேயே பல்வேறு வழிகளிலே, உண்மையை புரிந்து கொண்டு, உலகத்துடன் ஒன்றாகக் கூடிய அந்த வயதிலே அவர்களுக்கு அரசமைப்புக் கல்வியை கொண்டு செல்கின்றோம்.


வாண்டுகள் பயணம் என்ற பாடநூல் உண்மையான கல்வியைக் குழந்தைகளுக்குக் கொண்டு செல்கிறது. இன்று நமக்கு எவை மறுக்கப்பட்டிருக்கின்றதோ,நம்முடைய வகுப்பறைகளில் எவையெல்லாம் மறைக்கப்பட்டிருக்கின்றதோ, அந்தக் கல்வியை நாம் இன்றைக்கு இந்த அரசமைப்பு உரிமைக் கல்வி மூலம் வெளியிலே கொண்டு வருகிறோம்; அந்தக் கல்வியை வீதிகளிலே கொண்டு வந்திருக்கின்றோம். சமுதாயங்களுக்கு கொண்டு செல்கின்றோம்.




அனைவரும் ஒன்றாக இணைந்து தொலைத்துவிட்ட அரசியல் சாசன விழுமியங்களை மீட்டெடுப்பதற்கான மிகப் பெரிய ஒரு முயற்சியைத் தான் வான்முகில் அமைப்பு முன்னெடுத்துள்ளது. வகுப்பறைக் கல்வி எவ்வாறு இன்றைக்கு உண்மைக்கு திரைபோட்டு மறைக்கின்ற கல்வியாக மாறிவிட்டது என்பது நமக்குத் தெரியும். வகுப்பறைக் கல்வி என்பது பல்வேறு வகைகளிலே பெரும் குறைபட்ட ஒரு கல்வி. குழந்தைகளை கொடூரமான ஒரு உலகத்திற்கு கொண்டு செல்கின்ற கல்வியாகவே மாறிவிட்டது. ஏனென்றால் தங்களைப் பற்றி குழந்தைகள் புரிந்து கொள்ள முடியாது. அவர்களுடைய உலகத்தைப் பற்றி தெரிந்து கொள்ள இயலாத, அவர்களுடைய உலகத்தை மாற்றி புதிய உலகமாக – புத்தொளி பெறுகின்ற ஓர் உலகமாக மாற்றுவதற்கு பலனற்ற கல்வியாக இன்றைய வகுப்பறைக் கல்வி இருக்கிறது. அந்தக் கல்வியை வகுப்பறைகளில் இருந்து இன்று மீட்டெடுக்கும் ஒரு அருமையான முயற்சிதான் இது.

தாங்கள் வாழும் பகுதிகளிலேயே, தங்களுடைய வசிப்பிடங்களிலேயே இந்தக் குழந்தைகள் அரசமைப்பு உரிமைக் கல்வியைக் கற்கப் போகிறார்கள்! அதுவும் எப்பேற்ப்பட்ட குழந்தைகள் இக்கல்வியைக் கற்கப் போகிறார்கள் என்றால், இந்த இயக்கத்திலே – இந்தப் பெரு முயற்சியிலே – இந்தத் திட்டத்திலே இணைந்துள்ள குழந்தைகள், பழங்குடியின, அருந்ததியினக் குழந்தைகள், மீனவக் குழந்தைகள், சிறுபான்மையினக் குழந்தைகள் பல்வேறு வகைகளில் உரிமைகளை எல்லாம் இழந்த குழந்தைகள், அந்தக் குழந்தைகள் தான் தாங்கள் வசிக்கும் இடங்களிலேயே இந்த உரிமைப் பாடத்தை கற்கப் போகிறார்கள். தங்களுடைய இயற்கையான சூழலிலே இக்கல்வியைக் கற்கப் போகிறார்கள். கல்வி என்பது குழந்தைகளும், இளைஞர்களும் தங்களைப் பற்றிப் புரிந்து கொள்வதாகும். தங்கள் சமுதாயத்தைப் பற்றி புரிந்து கொள்வதும் தாங்கள் வசிக்கும் சூழலின் பிரச்சனைகளைப் பற்றி புரிந்து கொள்வதுமாகும். அப்பிரச்சனைகளுக்கு தங்களுடைய அனுபவங்களின் வாயிலாகவே தீர்வு காண்பதற்கு முனைகின்ற ஒரு சனநாயக சமூகம்தான் இன்றைய தேவை. அப்படிப்பட்ட சனநாயக சமுதாயம் இந்தியாவிலே உள்ளதா?




இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளுக்குப் பிறகு நமது அரசியல் சாசனத்தை அற்புதமாக வடிவமைத்துக் கொடுத்த மாமேதை அம்பேத்கர் அவர்களுடைய கனவினில் பிறந்த அந்த சனநாயக இந்தியாவை நாம் பார்க்கின்றோமா? இந்த இந்தியாவிலே எல்லா வகைப்பட்ட உரிமைகளும் மறுக்கப்படுகின்றன. உண்மையான சனநாயக நாட்டை உருவாக்க - இழந்த சனநாயகத்தையும், சனநாயகத்தின் ஆன்மாவான மனித உரிமைகளையும் எப்படி மீட்டெப்பது என்பதற்கான கல்விதான் இது!

இந்தப் பாடநூலிலே - வாண்டுகளினுடைய பயணத்தில், குழந்தைகளுக்கு மிக அருமையான பல பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் தங்கள் கிராமத்திலே பயணிக்கப் போகிறார்கள்; வீடு வீடாக பயணிக்க இருக்கிறார்கள்; தெருத் தெருவாக சுற்றுகிறார்கள். ஊரின் உண்மைகளை எல்லாம் கண்டறியப் போகிறார்கள். ஐக்கிய நாடுகள் சபையின் நிலைத்த நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை எந்த அளவிற்கு தங்களுடைய கிராமங்களிலே, வீடுகளிலே, தங்கள் தெருக்களிலே உருவாகிக் கொண்டு இருக்கின்றன; பிறந்து கொண்டு இருக்கின்றனவா அல்லது மறைந்து கொண்டு இருக்கின்றனவா? என்பதைப் பற்றிய ஆய்வுகளிலே குழந்தைகள் ஈடுபடப் போகிறார்கள். இந்தக் குழந்தைகளின் மூலமாக, அவர்களுடைய கண்கள் வழியே தரிசிக்கப்படுகின்ற கிராமங்கள், அவர்களின் கள்ளமற்ற கண்களின் ஊடாகத் தரிசிக்கப்படுகின்ற கிராமங்கள், அதில் இருந்து உருவாகின்ற உண்மைகள், அதில் இருந்து பிறக்கின்ற உண்மைகள், எவ்வளவு பெரிய சமூகப் பொருளாதார ஆய்வுகளாலும் அல்லது நிபுணத்துவம் கொண்டவர்களாலும் செய்யமுடியாது. பெரியவர்கள் கண்டுபிடிக்க முடியாத உண்மைகளை இக்குழந்தைகள் கண்டறிந்து நம் முன்னால் போட்டு உடைப்பார்கள். அதைத்தான் நாம் இங்கு எதிர்பார்க்கின்றோம். அதுதான் இக்கல்வி மூலம் நடக்கும். ஏனென்றால் குழந்தைகள் உண்மைகளைத் திரித்து சொல்பவர்கள் அல்லர்.









தங்களுடைய வாழ்க்கையை ஒவ்வொரு வீடாகச் சென்று ஒவ்வொன்றாக கேட்கப் போகிறார்கள். குழந்தைகள் எப்படிப் படிக்கிறார்கள்? எந்த வயது வரை படிக்கிறார்கள்? ஏன் பள்ளி இடைநிறுத்தம் ஏற்படுகின்றது? ஏன் இந்தக் குழந்தையினால் எதுவுமே புரிந்து கொள்ள முடியவில்லை? 8ஆம் வகுப்பு முடித்தாலும் ஒன்றுமே வாசிக்க முடியவில்லையே? இந்த அவல நிலைக்கெல்லாம் காரணம் என்ன? தங்களுடைய கிராமங்களிலே வீடுகளில் இருக்கக்கூடிய பெண்களின் நிலை என்ன? அவர்களுக்கு என்ன உரிமைகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன? அந்த பெண்களின் சுமைகள் என்ன? சாதியம் நமது கிராமங்களில் வேர்விட்டுப் பரவியுள்ளது. சாதியத்தின் கொடூரம் எப்படி எல்லாம் தங்களுடைய வாழ்க்கையில் ஆட்டிப் படைக்கின்றது? இதையெல்லாம் குழந்தைகள் நேரில் பார்த்து, புரிந்து கொண்டு, கிராமத்துச் சூழலிலே, கிராமத்தின் மையத்திலே உட்கார்ந்து கொண்டு, இவற்றைப் பற்றி எல்லாம் பேசப் போகிறார்கள்; விவாதிக்கப் போகிறார்கள்; இவற்றிற்கெல்லாம் என்ன தீர்வு என்பதைப் பற்றி அந்தக் குழந்தைகள் தங்களுக்குள் உரையாடல் நிகழ்த்தப் போகிறார்கள். அங்கு இருந்துதான் அந்த உண்மை பிறக்கும்.

அந்தக் கள்ளமில்லாத கண்கள்; அந்தக் கண்கள் வழியாக தரிசிக்கப்படுகின்ற கிராமங்கள். அந்த கண்கள் வழியாக தரிசிக்கப்படுகின்ற இந்திய உண்மை; தமிழ்நாட்டின் உண்மை. இது இன்றைக்கு உடைக்கப்படவேண்டும். அனைவரின் முன்னால் கொண்டு வந்து காண்பிக்கப்படவேண்டும். இங்கு இருந்துதான் தீர்வுகள் பிறக்கும்.



இன்று பள்ளிகளில் நடந்து கொண்டிருக்கின்ற கல்வி என்பது முழுக்க முழுக்க குழந்தைகளை அந்நியப்படுத்துகின்ற கல்வி; சமுதாயத்தில் இருந்து குழந்தைகளை வேருடன் பிடுங்கி எறிகின்ற கல்வி; தங்களுடைய உலகத்தை புரிந்து கொள்ள முடியாத ஒரு கல்வி; அந்நியப்படுத்துகின்ற இந்தக் கல்வியை மாற்றி, சமுதாயத்துடன் இந்தக் கல்வியை மாற்றி, குழந்தைகள் இணைகின்ற கல்வியாக மாற வேண்டும்.




இத்திட்டத்தில் இணையும் குழந்தைகள் ஆண்டாண்டு காலமாக – நூற்றாண்டு காலமாக உரிமைகள் மறுக்கப்பட்டவர்கள்; வஞ்சிக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். மலைவாழ் மக்களும், தலித் மக்களும், அருந்ததியினர் மக்களும், மீனவ மக்களும், சிறுபான்மையின மக்களும் காலங்காலமாக உரிமைகள் மறுக்கப்பட்டவர்கள். அவர்கள் இன்றைக்கு இங்கு களம் இறங்கப் போகிறார்கள். அவர்கள் கண்கள் வழியாக இந்த உலகத்தை புரிந்து கொள்ள தொடங்குவோம். இதுதான் உண்மையான கல்வி! இந்தப் புதிய உலகை படைக்கின்ற அரசமைப்பு உரிமைக் கல்வி அந்த கள்ளமில்லாத குழந்தைகளின் கண்கள் வழியாக உண்மையைப் புரிந்து கொள்வோம். இன்றைய சமுதாயத்தில் நிலவும் உண்மையின் கொடூரத்தையும் புரிந்து கொள்வோம். அந்த உண்மையின் அநீதிகளைப் புரிந்து கொள்வோம். அந்த உண்மைகள் மறைக்கின்ற – மறுக்கின்ற உரிமைகளைப் புரிந்து கொண்டு, அதை மீட்டெடுக்கும் பெரும் சக்தியாக இந்தக் கல்வி அமையும்!

இந்தக் குழந்தைகள் வீதிவீதியாகப் பயணப்பட்டு வாண்டுகள் பயணத்திலே தாங்களாகவே கண்டு பிடிக்கட்டும்! அவர்கள் மிகப் பெரிய விஞ்ஞானிகளாக தங்களுடைய உலகத்தை கண்டெடுக்கட்டும்! அவர்கள் அந்த உலகத்தை மீட்டெடுத்து, அந்த பிஞ்சுக் கரங்களின் வழியாக, நாம் அந்தச் சக்தியை பெறுவோம்! உரிமைகள் மறுக்கப்பட்டவர்களுக்கும், உரிமைகளை இழந்து – அநீதிகளை அனுபவிக்கும் அனைவருக்குமே உரிமைகளைக் கொண்டு போய் சேர்க்கின்ற இப்பெருமுயற்சியை தொடருவோம். வான்முகில் தொடங்கும் இந்த மாபெரும் முயற்சிக்கு – விடுதலைக் கல்வி முயற்சிக்கு நாம் அனைவரும் துணை நிற்போம்! இதுதான் விடுதலை அளிக்கின்ற கல்வி; அந்த விடுதலைக்கான கல்வி உலகத்திலே இருக்கின்ற மிகச்சிறந்த கல்வியாளர்களான பவுலோ பிரையர் போன்றவர்கள் எல்லாம் கனவு கண்ட அந்தக் கல்வி அம்பேத்கர் உருவாக்கிக் கொடுத்துள்ள அந்த அரசியல் சாசனக் கல்வியைக் காப்பாற்றுவோம் என்று கூறி வான்முகில் அமைப்பு முன்னெடுத்துள்ள இந்த மகத்தான பணிக்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.